# குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் (மார்ச் 03, 2023)

மார்ச் 02, 2023

குவாட் வெளியுறவு அமைச்சர்களின் அடுத்த கூட்டம் 03 மார்ச் 2023 அன்று புது தில்லியில் இந்தியாவால் நடத்தப்படும். வெளிவிவகார அமைச்சர், டாக்டர். எஸ். ஜெய்சங்கர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

2022 செப்டம்பரில் நியூயோர்க்கில் நடைபெற்ற கடைசி கூட்டத்தில் அமைச்சர்கள் கலந்துரையாடலைத் தொடர இந்த சந்திப்பு ஒரு வாய்ப்பாக அமையும். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து அவர்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வார்கள்.

குவாட் அதன் ஆக்கபூர்வமான நிகழ்ச்சி நிரல் மற்றும் பிராந்தியத்தின் சமகால முன்னுரிமைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அமைச்சர்கள் மதிப்பாய்வு செய்வார்கள்.

**புது தில்லி**

**மார்ச் 02, 2023**